செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 84 நாள் : 11-2-17

வேளாண்மை துறை

பத்திரிகை செய்தி

வறட்சி பகுதிகளில் பயறு வகை பயிர்களுக்கான சிறப்பு தொகுப்பு திட்டம் !

தற்பொழுது வடகிழக்கு பருவ மழை குறைவால் ஏற்பட்டுள்ள மாநிலம் தழுவிய வறட்சியினை எதிர் கொள்ள இருக்கின்ற நீரை கொண்டு அதிக அளவில் பயறு வகை பயிர்களை சாகபடி செய்திட அரசால் பயறு வகை பயிர்களுக்கான சிறப்பு தொகுப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்புதிட்டத்தில் குறைந்த அளவு நீர் தேவைப்படும் குறுகிய கால பயறுவகை பயிர்களான உளுந்து மற்றும் பச்சை பயறு ஆகிய பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில் ஒரு ஏக்கருக்கு ரூ 2000/- மதிப்பிலான விதைகள், உரம், நுண்ணூட்டகலவை மற்றும் உயிர் உரம் ஆகியவை மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

மேலும் தற்போதைய வறட்சி நிலையினை எதிர்கொள்ள குறைந்த நீரை கொண்டு அதிக பரப்பில் சாகுபடி செய்திட தெளிப்புநீர் பாசன கருவி (Sprinkler) ஒன்றுக்கு ரூ 19600/- வீதமும் மற்றும் மழை தூவான் கருவி (Raingun) ஒன்றுக்கு ரூ 31600/- வீதமும் சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும் வழங்கப்பட உள்ளது.

இந்த் வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு சிறப்பு தொகுப்புதிட்டத்தில் பங்கு பெற்று பயன் பெறுமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுகொள்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்காக
வேலூர்

Rajendran
Agrl. officer, % JDA, Vellore
8144187292

செ.ம.தொ.அ. 11.2.17.
வேலூர்- 9.